# வலயக்கல்வி அலுவலகம்

# மன்னார்

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை – 04

## வினாப்பத்திரம் - 02

## 2023

சுட்டெண் - ……………………  நேரம்:- 1.15 மணித்தியாலம்

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உங்கள் சுட்டெண்ணை அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டிலும் 3வது பக்கத்திலுள்ள புள்ளிக்கோட்டிலும் எழுதுக.
- இவ்வினாத்தாளில் 62 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |

| | |
|---|---|
| இலக்கத்தில | |
| எழுத்தில | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br><br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ……………………<br>பெயர்<br>……………………<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br><br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன் | ……………………<br>பெயர்<br>………………<br>ஒப்பம் |
| முதிபீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீடசகர்<br><br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளியும் சரியென உறுதிப்படுத்துகின்றேன் | ……………………<br>பெயர்<br>……………………<br>ஒப்பம் |

01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்

நீல வானைச் செந்நிமாக்கிய கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துனிகளைத் தொட்டுச் செல்கின்றான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. பச்சைப் பட்டாடை விரித்தாற் போல் காட்சி தரும் வயல் வெளிகளும், புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்கு தலை அசைக்கின்றன.

பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

1) நீல வானைச் செந்நிறமாக்கியது எது? ______________________

2) பொன் + கரம் என்பதைச் சேர்த்து எழுதுக.______________________

3) காலை நேரத் தென்றலுக்கு தலை அசைப்பவை எவை?

______________________

4) அடுக்குமொழிச் சொல்லைத் தருக? ______________________

5) இலைகளின் நடுவே இரத்தினக்கற்களாக மின்னியவை எவை? ______________________

6) கழனி என்பதன் ஒத்த கருத்தைத் தரும் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச் சொல்லை எழுதுக? ______________________

(6 புள்ளி)

**02)** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை என்பவற்றின் தொடர்பு சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின்( x )பிழை எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1) ஆடுகள் வயலை நோக்கிச் செல்லும். ( )
2) அணில்கள் மரத்துக்கு மரம் தாவுகின்றன. ( )
3) ஒவ்வொரு பூவும் அழகானவை. ( )

(3 புள்ளி)

**03)** பின்வரும் பழமொழியின் கருத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

♥ காற்றுள்ள போதே தூற்றிக் கொள் .

______________________

(1 புள்ளி)

**04)** கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

♥ எமக்கு / கையசைத்து / இருமருங்கிலுமிருந்தும் / தெரிவித்தனர் / வீதியின் / பாதசாரிகள் / வாழ்த்துத்

______________________

______________________

(1 புள்ளி)

**05)** பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.

♥ ஆசிரியர் பூக்களைப் பறிக்க வேண்டாம் என்று கூறினார

(1 புள்ளி)

**06)** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடு.

1) பரிசழிப்பு / பரிசளிப்பு / பரிசலிப்பு

2) எண்ணைய் / எண்ணெய் / எண்நெய்

(2 புள்ளி)

**07)** பின்வரும் தொடர் மொழிக்கு ஒரு மொழியை எழுதுக.

♥தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர்:- ______________________ (1 புள்ளி)

**08)** இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

கிளி - பிள்ளை எனின், மூங்கில் - ( கன்று / குட்டி ) (1 புள்ளி)

**09)** கீழுள்ள வாக்கியத்தின் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை காண்க.

**"அம்மா சோறு சமைத்தாள்"**

எண்:- ______________ காலம்:- ______________________ பால்:- ______________

இடம் :- ____________________ திணை :- ____________________

(5 புள்ளி)

**10)** பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியல் எழுதுக.

1) நல்ல கருத்துக்களை __________ ( **அரிய / அறிய** ) ஆர்வம் வேண்டும்.
சிங்கம் _______ ( **ஊண் / ஊன்** ) உண்ணி விலங்காகும். (2 புள்ளி)

**11)** பின்வரும் வாக்கியத்தை வாசித்து எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பவற்றை எழுதுக.

**" உயரமான மரத்தில் காகம் கூடு கட்டியது."**

எழுவாய்:- ____________________

பயனிலை:- ____________________

செயற்படுபொருள்:- ____________________ (3 புள்ளி)

**12)** கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1) the / you / floor / I / to / sweep / help

______________________________________________

2) are / flowers / two / There

______________________________________________

(2 புள்ளி)

**13)** ஒவ்வொரு படத்திற்குமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

 ______________________  ______________________

(2 புள்ளி)

**14)** ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

pond :- ______________________ mosquito :- ______________________

(2 புள்ளி)

**15)** "பிரஹஸ்பதிந்த" என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. ______________________

**16)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
" எனக்கு வாழைப்பழம் தாருங்கள்." ______________________

(2 புள்ளி)


**பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக**

1) 49700 எனும் எண்ணுக்குப் பிந்திய எண்ணை எழுத்தில் எழுதுக?
..............................................................

2) மூன்று தீக்குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க பத்திற்கு உட்பட்ட உரோமன் எண்களை உரோமன் எண்குறியில் எழுதுக? ..............................


3) 18 அப்பியாசப் புத்தகங்களில் $\frac{4}{6}$ வீதத்தை வியாபாரி விற்றார். எனின், எஞ்சியுள்ள அப்பியாசப் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

4) நிமிடம் ஒன்றில் 95 பால் பைக்கற்றுக்கள் வீதம் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலையில் 8 நிமிடத்தில் எத்தனை பால் பைக்கற்றுக்கள் உற்பத்தி செய்யப்படும்? ..............................


5)  பென்சிலின் நீளம் எத்தனை சென்றி மீற்றர்?
..............................

6) பேருந்து ஒன்று பி.ப 5. 45ற்கு பயணத்தை தொடங்கி மு.ப 3.45இற்கு பயணத்தை நிறைவு செய்தது எனின், அப்பேருந்து பயணத்திற்கு செலவழித்த காலம் யாது?
..............................................................

7) 5 லீற்றர் 250 மில்லலீற்றர் தேனை 250 மில்லி லீற்றர் கொண்ட 5 போத்தல்களில் ஊற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் தேனின் அளவு யாது? ..............................

8)  இத்திண்ம உருவின் உச்சிகளினதும் விளிம்புகளினதும் கூட்டுத்தொகையை எழுதுக. ..............................

9) உருவில் நிழற்றப்படாத பகுதியைப் பின்னமாக எழுதுக.
..............................



10) ஒரு நிறத்தாளில் இரண்டு வாழ்த்து மடல்கள் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது எனின், 55 பேருக்கு வாழ்த்து மடல்கள் தயாரிப்பதற்கு எத்தனை நிறத்தாள்கள் தேவை? ..........................................

11) சாதாரண வருடமொன்றில் முதற் காலாண்டில் உள்ள நாட்கள் எத்தனை?

..........................................

12) ஒரு பாடசாலையில் 1435 பெண் மாணவர்களும் 605 ஆண் மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள் எனின், அப்பாடசாலையில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைச் சொற்களில் எழுதுக.

..........................................

13) 2.5 km ஐ m இல் எழுதுக. ..........................................

14)

| | | |
|---|---|---|
| 68 | | 94 |
| 45 | 96 | |
| | | 72 |
| 54 | 81 | |

கட்டத்தில் உள்ள எண்களில் ஒன்பதின் மடங்குகளாக அமையும் எண்களை எழுதுக.

..........................................

15) 1kg பருப்பு ரூபாய் 170.00 எனின் 4kg 500g பருப்பின் விலை யாது? ரூ. ..........................................

(30 புள்ளிகள்)

**17) மிகச்சரியான சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) ஆட்களின் மனதைத் தாக்கும் வகையிலான சொற்களைப் பயனபடுத்துவதைத் தவிர்ப்பது,
   1. தாழ்மையான நடத்தை  2. நடுநிலமையான நடத்தை  3. ஆக்கிரமிப்பு நடத்தை

2) எளிமையான வாழ்க்கைக்கு நாம் செய்ய வேண்டியவை
   1. வீண் விரயத்தைத் தவிர்த்தல்.
   2. ஆடம்பர ஆடையைத் தவிர்த்தல்
   3. மனம் விரும்புவதை நாடுதல்.

3) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியங்கள் ,
   1. உடற்கொழுப்பு குறையும்
   2. பூரிப்பான சருமம் ஏற்படும்
   3. சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்.

4) ‘‘எல்லாவற்றிலும் வெற்றி கொள்ள என்னால் முடியும்’’என்பது தியானச் செயற்பாட்டின்
   1. 3வது படி  2. 5வது படி  3. 4வது படி

5) சுசந்திகா ஜயசிங்க பதக்கம் பெற்றது,
   1. தடைதாண்டல் போட்டி  2. 400m ஓட்டம்  3. 200m ஓட்டம்

6) கலைகள் பண்பாடுகள் தற்காலத்தில் அழிவுறும் நிலைக்கு உள்ளாகியிருப்பதற்கான காரணம்,
   1. பெறுமானத்தை இனங்காணல்
   2. மதிப்பு வழங்காதிருத்தல்
   3. பாதகமான செயல்களைச் செய்யாதிருத்தல்

7) நீரால் தம்மை வுழு செய்யும் சமயத்தவர்கள்,
1. இஸ்லாமியர்கள் 2. பௌத்தர்கள் 3. இந்துக்கள்

8) இலங்கையில் ஆதிவாசிகள் அதிகம் வசிக்கும் இடம்,
1. விந்தனை 2. ரத்தகல 3. தம்பானை

9) ஶ்ரீ விக்ரம சர்வசித்தி எனும் பெயரில் முடி சூட்டப்பட்டவர் யார்?
1. மொனராவில கெப்பட்டிப்பொல திசாவ
2. குணானந்த தேரர்
3. கொங்காலே கொட பண்டா

10) "எனது கழுத்தை ஒரு வாள் வீச்சில் துண்டித்து விடுங்கள்" எனும் கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
1. கொங்காலே கொட பண்டா
2. மொனராவில கெப்பட்டிப்பொல திசாவ
3. டீ.எஸ்.சேனநாயக்கா

11) சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் நிறுவனம் பின்வருவனவற்றுள் எது?
1. மாவட்ட செயலகம் 2. பிரதேச செயலகம் 3. பிரதேச சபை

12) மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை, என்பவற்றால் வழங்கப்படும் சேவைகளில் ஒன்று,
1. முதியோர் அடையாள அட்டை வழங்குதல்
2. வெள்ள நிவாரணங்கள் வழங்குதல்.
3. துவிச்சக்கர வண்டிகளுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

13) வதிவிடச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி,
1. சமுர்த்தி அதிகாரி
2. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
3. கிராம அதிகாரி

14) காசோலைகளை மாற்ற நாம் செல்ல வேண்டிய இடம்,
1. தபாலகம் 2. வங்கி 3. கச்சேரி

15) இலங்கையில் காணப்படும் உலக மரபுரிமையாகக் கணிப்புப் பெற்ற ஒன்று அல்லாதது,
1. தலதா மாளிகை 2. கந்தளாய்க் குளம் 3. காலிக்கோட்டை

16) இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகளில் ஒன்று
1. மன்புளுட்டா 2. கொம்பு ஓணான் 3. கலவத்தான்

17) பின்வரும் எத்தாவரங்களில் நார்வேர்த்தொகுதி காணப்படும்.
1. கமுகு 2. ஆல் 3. அரசு

18) ரம்பைத் தாவரத்தில் காணப்படும் வேர்,
1. காற்று வேர் 2. தாங்கும் வேர் 3. மிண்டி வேர்

19) கைவிரல் அமைப்புடைய இலையை உடைய தாவரம்,
1. அடம்பன் 2. ஆமணக்கு 3. அரசு

20) கதிர்களை உருவாக்கும் பயிர்களில் ஒன்று இல்லாதது,
1. நெல் 2. குரக்கன் 3.சோளம்

21) தாவர வளர்ச்சிக்கு அவசியமான, ஆனால் வித்து முளைத்தலுக்கு அவசியமற்ற காரணி,
1. வளமான மண 2. சூரிய ஒளி 3. போதிய இடவசதி

22) முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பாலூட்டி எது?
1. ஓணான் 2. எறுப்புண்ணி 3. அணில்

23) மீன்கள் இடம் பெயரப் பயன்படுத்துவது,
1. மார்புச் செட்டை 2. வாற்செட்டை 3. முதுகுச்செட்டை

24) ஆபத்தேற்படும் போது உடலை பந்து போல சுருட்டிக் கொள்ளும் பிராணி,
1. மரஅட்டை 2. ஆமடில்லா 3. பாம்பு

25) பின்வரும் பிராணிகளில் ஊனுண்ணிப் பிராணி எது?
1. கொக்கு 2. காகம் 3. கோழி

26) இயற்கையாகவே கிடைக்கும் சுவை மிகுந்த பானம் எது?
1. இளநீர் 2. நெல்லிரசம் 3. எலுமிச்சம்பழப்பானம்

27) கனியுப்புக்கள், விற்றமின்கள் அடங்கிய உணவுப் பொருட்களை உண்பதால் ஏற்படும் நன்மை,
1. உடல் வளர்ச்சி
2. உடலுக்கு சக்தி கிடைக்கும்
3.உடலை நோய் நொடியிலிருந்து பாதுகாத்தல்

28) நீரிழிவு நோயாளர்கள் உண்பதற்குப் மிகவும் உகந்த உணவு வகை எது?
1.வத்தாளைக்கிழங்கு 2.காராமணிப் பயறு 3. சர்க்கரைச் சாதம்

29) மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு நிர்மாணிப்பு,
1. மின்சூள் 2. மின்மணி 3. ஊசித்துளைக்கமரா

30) தேசப்படங்களில் நீர் நிலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் நியம நிறம்,
1. பச்சை 2. கபிலம் 3. நீலம்

(30 புள்ளிகள்)

**19)** நெகிழிகளை பாவிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி மூன்று வாக்கியம் எழுதுக எழுவாய், பயனிலைத் தொடர்புகளுடன் எழுத்துக்கூட்டலுடன் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(6 புள்ளிகள்)